**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், எழுமாத்தூர் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.**

முன்னிலை : திரு.கோ. விஜயகுமார், B.Sc., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
எழுமாத்தூர் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.

2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 10ம் நாள் செவ்வாய்கிழமை
(திருவள்ளுவராண்டு 2057, விசுவாவசு வருடம், மாசி மாதம் 26ம் நாள்)

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.88/2024**
**CNR No.TNED23-000129 -2024**

அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
அரச்சலூர் காவல் நிலைய,
குற்ற எண்.195/2018 .. குற்றமுறையீட்டாளர்.

//எதிர்//

பி. சிவகார்த்தி (22)
த/பெ. பழனிச்சாமி,
சத்திரம் வீதி,
பழையகோட்டை ரோடு,
காங்கேயம் தாலூக்கா
திருப்பூர் மாவட்டம். ..எதிரி.

| வரிசை எண் | விளக்கம் | விவரங்கள் | |
|---|---|---|---|
| 1. | சம்பவம் நடந்த நாள் | 17.09.2018 | |
| 2. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | 17.09.2018 | |
| 3. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | கைது செய்யப் பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | 17.09.2018 | காவல் நிலைய பிணையில் சென்ற நாள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | 17.09.2018 |
| 4. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 10.10.2018 | | |
| 5. | குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 08.07.2022 | | |
| 6. | கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்யப் பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள் | -- | | |
| 7. | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1 | 27.07.2022 | 27.07.2022 |
| | | அ.சா.2 | 27.07.2022 | 27.07.2022 |
| | | அ.சா.3 | 27.07.2022 | 27.07.2022 |
| | | அ.சா.4 | 02.11.2022 | 02.11.2022 |
| | | அ.சா.5 | 09.11.2022 | 09.11.2022 |
| | | அ.சா.6 | 19.07.2023 | 19.07.2023 |
| | | அ.சா.7 | 19.07.2023 | 19.07.2023 |
| | | அ.சா.8 | 09.082023 | 09.082023 |
| | | அ.சா.9 | 09.082023 | 09.082023 |
| | | அ.சா.10 | 04.10.2023 | 04.10.2023 |
| | | அ.சா.11 | 13.03.2024 | 13. 03.2024 |
| | | அ.சா.12 | 22.01.2026 | 22.01.2026 |
| 8. | எதிரியிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள் | 27.01.2026 | | |
| 9. | எதிரி மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | பிடியாணை வழங்கப்பட்ட நாள் | பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள் | |
| | | – இல்லை – | – இல்லை – | |
| 10. | வழக்கு தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்ட நாள் | 03.03.2026 | | |
| 11. | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 10.03.2026 | | |

இவ்வழக்கு நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 ஈரோட்டில் 20.10.2021 தேதி சி.சி.எண்.415/2021 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, வழக்கு நிலுவையில் இருந்த நிலையில் மாண்புமிகு ஈரோடு மாவட்ட முதன்மை நீதிமன்ற 21.08.2024ம் தேதியிட்ட உத்தரவு எண்.A.No.437/2024ன் படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, இந்நீதிமன்றத்தில் 13.09.2024ம் தேதி சி.சி.எண்.88/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின் 03.03.2026ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–II அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.சிவானந்தன் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப் பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்

## தீ ர் ப் பு ரை

அரச்சலூர் காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 279, 337 (8எண்ணிக்கை) 304(A) ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

### 1. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் சுருக்கம் :–

கடந்த 17.09.2018ம் தேதி காலை 07.35 மணிக்கு அறச்சலூர் காவல்நிலையச் சரகத்திற்குட்பட்ட ஈரோடு – காங்கயம் மெயின் ரோட்டில் வெள்ளக்கவுண்டன்வலசு என்ற இடத்தில் எதிரி பழனியிலிருந்து அந்தியூர் நோக்கி TN 33 N 2737 என்ற அரசுப் பேருந்தை தெற்கிலிருந்து வடக்காக தனக்கு முன்னால் சென்ற இருசக்கர வாகனத்தை முந்துவதற்கு முயற்சி செய்து அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து எதிரில் சாட்சி.பழனிச்சாமி ஈரோட்டிலிருந்து கொடைக்கானல் செல்வதற்காக வடக்கிலிருந்து தெற்காக ஓட்டிவந்த TN 33 N 2760 என்ற அரசுப் பேருந்து மீது மோதாமல் இருக்க TN 33 N 2737 எதிரி ஓட்டிவந்த TN 33 N 2760 பஸ் மீது மோதாமல் இருக்க எதிரி அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும், தாறுமாறாகவும், இடது பக்கம் திருப்ப எதிரி ஓட்டிவந்த மேற்படி பேருந்தின் வலது பின்பக்கம், சாட்சி பழனிச்சாமி ஓட்டிவந்த TN 33 N 2760 பஸ்ஸின் முன்பக்கம் பட்டும் தொடர்ந்து

எதிரியானவர் தாறுமாறாக TN 33 N 2737 பஸ்ஸை வலது பக்கம் திருப்ப TN 33 N 2737 பஸ்ஸின் இடது பின்பகுதி ரோட்டின் மேற்புறம் இருந்த ஒரு வேப்பமரத்தில் பலமாக மோதி விபத்து ஏற்பட்டு இரண்டு வாகனங்களுக்கும் பலத்த சேதத்தை ஏற்படுத்தியதாகவும், மேலும் சம்பவத்தின் தொடர்ச்சியாக எதிரி ஓட்டிவந்த பேருந்தில் பயணம் செய்த சாட்சிகள் செந்தில்குமார்.7 நட 1. தீபக் 2. யுவராஜ் சாட்சி.3 குமாரசாமி, சாட்சி4.செல்வராஜ் சாட்சி.5பிரேம்குமார் சாட்சி.6 செந்தில், சாட்சி.7 மணிகண்டன் பூபதி சாட்சி.8 சந்திரசேகரன் அகியோரின் மீது மோதி சாதாரணக்காயத்தை ஏற்படுத்தியதாகவும் மேலும் சம்பவத்தின் தொடர்ச்சியாக எதிரி சிவகார்த்தி என்பவர் ஏற்பத்திய விபத்தில் எதிரி ஓட்டிவந்த பேருந்தில் பயணம் செய்த கவுஸ்மைதீன் என்பவருக்கு முன் மண்டை, இடதுபக்க மண்டை, இடது கண்ணம், இடதுகணுக்கால் வலது மார்பு, வலது மார்பில் இருந்து வலது கைபுஜம் வரையும், மார்பிலிருந்து அடிவயிறு வரை இடதுபாதம் இடது கை புஜம், இடது முன்கை ஆகிய இடங்களில் பலத்த காயங்கள்ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துள்ளதாகவும் எதிரிகள் மீது அரச்சலூர் காவல் நிலைய ஆய்வாளர் இதச பிரிவு 279, 337( 8 எண்ணிக்கை) 304(ஏ)ன் படி குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்

2. மேற்படி குற்ற இறுதி அறிக்கையை பெற்ற இந்நீதிமன்றம் மேற்படி அறிக்கையை நன்கு பரிசீலித்து மேற்படி எதிரி மீது இதச பிரிவு 279, 337(8 எண்ணிக்கை) 304(A) ன் படி வழக்கினை கோப்புக்கு எடுத்துக் கொண்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிக்கு அரசு தரப்பினரால் ஆதாரமாகக் கொள்ளப்பட்டதும், குவிமுச பிரிவு 207வது பிரிவின் படி உள்ளதுமான ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது.

4. ஆவணங்களைப் பரிசீலனை செய்ததின் பேரில் எதிரி மீது கேள்விகள் கேட்க போதிய ஆதாரங்கள் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதியதால், எதிரி மீது இதச பிரிவு 279, 337(8 எண்ணிக்கை)304(A)ன் கீழ் குற்றம் பற்றி வினவிய போது எதிரி குற்றத்தினை மறுத்துரைத்தார். எனவே வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக அ.சா.1 முதல் அ.சா.12 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.21 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. <u>**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் பின்வருமாறு:–**</u>

(i) அ.சா. 1 பழனிச்சாமி தனது சாட்சியத்தில் தான் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் ஓட்டுனராக வேலை பார்த்து வருவதாகவும், கடந்த 17.09.2018ம் தேதி காலை 6.55 மணிக்கு TN 33 N 2760 என்ற பேருந்தை ஈரோடு பேருந்து நிலையத்திலிருந்து பயணிகளை எற்றிக்கொண்டு கொடைக்கானல் செல்வதற்காக நடத்துனர் ஆறுமுகம் என்பவருடன் கிளம்பிச் சென்று கொண்டிருந்தபோது பூந்துறை தாண்டி வெள்ளகவுண்டன்வலசு என்னும் இடத்தில் பேருந்து சென்றுகொண்டிருந்தபோது எதிராக வந்த அரசு பேருந்து TN 33 N 2737 என்ற பேருந்தை எதிராக இருசக்கர வாகனத்தை முந்தி வந்தபோது தான் ஓட்டிச்சென்ற பேருந்தின் மீது எதிரி தான் ஓட்டிவந்த பேருந்தை தாறுமாறாக அதிவேகமாக ஓட்டிவந்து தன்னுடைய பேருந்தில் மோதாமல் இருப்பதற்காக இடது மற்றும் வலது பக்கமாக பேருந்தை இயக்கியதில் இடதுபுறமாக இருந்த வேப்பமரத்தின் மீது மோதி முன்னிருக்கையில் அமர்ந்திருந்த கவுஸ்மொய்தீன் என்பவருக்கு தலையில் தோள்பட்டை மற்றும் முகத்தில் பலத்த காயங்கள் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும், மற்றும் பிற பயணிகளுக்கும் காயங்கள் ஏற்பட்டதாகவும் விபத்து சம்மந்தமாக அரச்ச்லூர் காவல் நிலையத்தில் தகவல் சொல்லி காயமடைந்த நபர்களை 108 ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனை அனுப்பி வைத்ததாகவும், மேற்படி வழக்கு சம்மந்தமாக அரச்சலூர் காவல் நிலையத்தில் புகார் மனு அ.சா.ஆ.1 கொடுத்ததாக சாட்சியமளித்துள்ளார்.

(ii) அ.சா.2 திரு.ஆறுமுகம் தான் தமிழ்நாடு அரசு போக்வரத்துக்கழகத்தில் நடத்துனராகப் பணிபுரிந்து வருவதாகவும் சம்பவம் குறித்து அ.சா.1ன் சாட்சியத்துடன் ஒத்திசைந்து சாட்சியமளித்து தான் சென்று பார்த்தபோது ஒரு நபர் அடிபட்டு கீழே

உருண்டு வந்து கொண்டிருந்ததாகவும் பின்பு சம்பவ இடத்திலேயே இறந்து விட்டதாகவும் மற்ற காயமடைந்த பயணிகளை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகக் சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) அ.சா.3 திரு.தீபக் தனது சாட்சியத்தில் கடந்த 17.09.2018ம் தேதி காலை 7.30 மணிக்கு TN 33 N 2737 என்நற பேருந்தில் அரச்சலூர் காவல்நிலைய பேருந்தில் முன்பகுதியில் ஏறி பேருந்தில் உள்ளே சென்றகொண்டிருந்த சமயம் தான் சென்ற பேருந்து பொறுமையாக சென்று கொண்டிருந்ததாகவும், தலவுமலை என்னுமிடத்தில் உள்ள வளைவில் எதிராக வந்த பேருந்து வலது பக்கமாக வேகமாக வந்து கொண்டிருந்தது தான் பயணம் செய்த பேருந்தை ஓட்டுனர் இடது புறமாக திருப்பியபோது எதிராக வந்த பேருந்து தான் பயணம் செய்த பேருந்தில் மோதி அதில் தனக்கு கை மற்றும் தலையில் காயம் ஏற்பட்டதாகவும், தான் ஈரோடு அரசு மருத்துவமனயில் சிகிச்சை பெற்று பின்பு மேல்சிகிச்சைக்காக டிரஸ்ட் மருத்துவமனையில் சேர்ந்ததாகச் சாட்சியமளித்துள்ளார்.

(iv) அ.சா.4 திரு.முருகேசன் தான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் பழனி கிளை 2ல் பணிபுரிந்து வருவதாகவும் சம்பவத்தன்று தான் டி.எண்.33 என்.2737 பேருந்தில் தான் நடத்துனராக பணியிலிருந்ததாகவும் ஆஜர் எதிரி பேருந்தின் ஓட்டுனராக இருந்ததாகவும், பழனியில் காலை 5.50 மணிக்கு டிரிப் எடுத்து ஈரோடு வருவதற்காக காங்கேயம் – ஈரோடு ரோட்டில் அறச்சலூரில் பேருந்தில் பயணிகளை இறக்கிவிட்டு மற்றும் பயணிகளை ஏற்றிக்கொண்டு தளவுமலை தாண்டி வெள்ளைகவுண்டன்வலசு அருகே வந்தபோது குறுகிய வளைவு சாலையில் வடக்கிலிருந்து தெற்காக வந்த டி.எண்.33 என்.2760 என்ற அரசு பேருந்து வலது புறமாக ஏறி வந்து எதிராக ஏறிவந்த பேருந்தை விபத்தை தடுப்பதற்காக எதிரி பேருந்தை இடதுபுறமாக இயக்க பேருந்தின் பின்பக்கவாட்டில் மோதி பேருந்து பின்பக்க மரத்தின் மீது மோதியதும் தான் மயக்கமாகிதாகவும் பின் என்ன நடந்தது என்று தனக்கு

தெரியாது என்றும் பின் இருக்கையிலிருந்த ஒரு நபர் இறந்து விட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

(v) அ.சா.5 திரு.செல்வராஜ் தனது சாட்சியத்தில் கடந்த 17.09.2018ம் தேதி தான் அரச்சலூரிலிருந்த ஈரோட்டிற்கு அரசு பேருந்து டி.எண்.33 என்.2737 என்ற பேருந்தில் காலை சுமார் 730 மணிக்கு புறப்பட்டு அறச்சலூர் தலவுமலை தாண்டி வெள்ளைக்கவுண்டன்வலசு தாண்டி வந்துகொண்டிருந்தபோது ஓட்டுநர் அதிவேகமாக ஓட்டிவந்து தான் பயணித்த பேருந்து இருசக்கர வாகத்தின் மீது மோதக்கூடாது என்பதற்காக இடதுபுறமாக இயக்கியதில் எதிர் திசையில் வந்த பேருந்து தங்கள் பேருந்தின் பின்பகுதியில் மோதி பேருந்திற்கு எதிர் திசையில் வந்த பேருந்தின் முன் பக்கத்தில் சேதாரம் ஏற்பட்டதாகவும், தங்கள் பேருந்தில் பயணம் செய்த கௌஸ்மொய்தின் என்பவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும் தான் 108 ஆம்புலன்ஸ் மூலம் ஈரோடு அரசு மருத்துவமனை சென்றதாகக் சாட்சியமளித்துள்ளார்.

(vi) அ.சா.6 திரு.செந்தில் தனது சாட்சியத்தில் கடநத் 17.9.2018ம் தேதி ஈரோடு செல்வாற்காக பழனி ஈரோடு செல்லும் அரசுபேருந்தில் ஏறி பயணம் செய்து வந்ததாகவும் காலை 7.30 மணிக்கு அறச்சலூர் தலவுமலை தாண்டி சாலையில் சென்றுகொண்டிருந்தபோது பின் இருக்கையில் தான் அமர்ந்து கொண்டிருந்ததாகவும் எதிராக வந்தபோருந்து அதிகவேகமாக வந்து இரண்டு பேருந்துகளும் மோதிக்கொள்ளாமல் இருப்பதற்காக எதிரி பேருந்தை இடதுபுறமாகதிருப்ப பேருந்தின் பின்பகுதி மரத்தில் மோதி தனக்கு 4 நபர்கள் தள்ளி பின் இருக்கையில் அமர்ந்திருந்த கவுஸ் மைதீன் என்பவர் தூக்கி வெளியே வீசப்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்து விட்டதாகவும் விபத்தில் தனக்கு காயம் ஏற்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகச் சாட்சியமளித்துள்ளார்.

(vii) அ.சா.7 திரு.சந்திரசேகரன் தனது சாட்சியத்தில் கடந்த 17.9.2018ம் தேதி காலை 7.30 மணிக்கு ஈரோடு செல்வதற்காக பழனி – ஈரோடு செல்லும் டி.எண்.33 என்.2737

என்ற அரசு பேருந்தில் பயணம் செய்ததாகவும் பேருந்து தலவுமலை தாண்டி வெள்ளைக்கவுண்டன்வலசு பகுதியில் சென்றபோது தான் பயணம் செய்தபேருந்து தாறுமாறாகவும் வேகமாகவும் சென்று எதிராக வந்த அரசுபேருந்து அதிவேகமாக வந்தது எதிராக வந்த பேருந்து தான் பயணம் செய்த வந்த பேருந்தின் முன் பகுதியில் மோதி பேருந்து நிலை தடுமாறி பின்பகுதியில் மரத்தின் மீது மோதியதில் தான் பேருந்திலிருந்து தூக்கி வீசப்பட்டு தனக்கு தாடை மேல் உதடு, இடது முழங்கால் ஆகிய இடங்களில் அடிபட்டு தன்னை 108 ஆம்புலன்ஸ் மூலமாக அரசு மருத்துவமனை அனுப்பி வைத்ததாகக் கூறியுள்ளார்.

(viii) அ.சா.8 திரு.பிரேம்குமார் தனது சாட்சியத்தில் கடந்த 17.9.2018ம் தேதி காலை 7.30 மணிக்கு ஈரோடு செல்வதற்காக பழனி – ஈரோடு செல்லும் டி.எண்.33 என்.2737 என்ற அரசு பேருந்தில் பயணம் செய்ததாகவும், பேருந்து தலவுமலை தாண்டி வெள்ளைக்கவுண்டன்வலசு பகுதியில் சென்றபோது தான் பயணம் செய்தபேருந்து வலதுபுறமும், இடதுபுறமும் பேருந்தை திருப்பியதாகவும் இடதுபுறத்தில் இருந்த புளியமரத்தில் மோதி சம்பவ இடத்திலேயே கடைசி இருக்கையில் பயணம் செய்த கௌஸ்மைதீன் இறந்துவிட்டதாகவும் தனக்கு மூக்கு, வலதுகை பெருவிரலில் காயம் எற்பட்டு தன்னை 108 ஆம்புலன்ஸ் மூலமாக அரசுமருத்துவமனை அனுப்பி வைத்ததாகக் கூறியுள்ளார்.

(ix) அ.சா.9 திரு.மணிகண்ட பூபதி தனது சாட்சியத்தில் கடந்த 17.09.2018ம் தேதி காலை 7.30 மணிக்கு ஈரோடு செல்வதற்காக பழனி – ஈரோடு செல்லும் டி.எண்.33 என்.2737 என்ற அரசு பேருந்தில் பயணம் செய்ததாகவும் பேருந்து தலவுமலை தாண்டி வெள்ளைக்கவுண்டன்வலசு பகுதியில் சென்றபோது தான் பயணம் செய்த பேருந்து இடது மற்றும் வலதுபுறமாக மாறி மாறி சென்று எதிர் திசையில் வந்த பேருந்தில் உரசி தான் பயணம் செய்த பேருந்து புளியமரத்தில் மோதி நின்றதாகவும், தனக்கு தோள்பட்டை, கால் முட்டி மற்றும் சிறிய அளவில் காலில் காயங்கள் ஏற்பட்டதாகவும், தான் ஈரோடு அரசு மருத்துவமனையில் முதலுதவி செய்துகொண்டு பழனி தனியார் மருத்துவமமைனயில் சிகிச்சை எடுத்துக்கொண்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

(x) அ.சா.10 திரு. ஜெகநாதன் தனது சாட்சியத்தில் தான் கடந்த 17.09.2018ம் தேதி காலை 7.30 மணிக்கு தான் வீட்டிலிருந்தபோது தங்கள் வீட்டின் முன்பு ஈரோடு காங்கேயம் ரோட்டில் பலத்த சத்தம் கேட்டு வந்து பார்த்தபோது ஈரோட்டிலிருந்து கொடைக்கானல் செல்லும் அரசு பேருந்தும், பழனியிலிருந்து ஈரோடு நோக்கி வரும் அரசு பேருந்தும் மோதாமல் இருப்பதற்காக ஓரமாக திருப்பியபோது மரத்தில் மோதி விபத்து ஏற்பட்டு இரண்டு பேருந்துகளுக்கும் சேதாரம் ஏற்பட்டதாகவும் சம்பவ இடத்திற்கு அரச்சலூர் காவல் நிலைய ஆய்வாளர் வந்து தன்னையும் சண்முகம் என்பவரையும் சாட்சியாக இருக்க கேட்டு தங்கள் இருவர் முன்னிலையில் பார்வை மகஜர் அ.சா.ஆ.2, மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், சாட்சியமளித்துள்ளார்.

(xi) அ.சா.11 திரு.கிருஷ்ணராஜ் உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில் தான் கடந்த 17.09.2018ம் தேதி அறச்சலூர் காவல்நிலையத்தில் நிலைய அலுவலில் இருந்தபோது பழனிச்சாமி என்பவர் நிலையம் அஜராகிக் கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 பதிவு செய்ததாகவும், பின்பு வழக்குகோப்பினை புலன் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாக சாட்சியமளித்துள்ளார்

(xii) அ.சா.12 திரு.ராஜாகண்ணன் தற்போது அரச்சலூர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர் தங்கவேல் தற்போது உடல்நிலை சரியில்லாமல் நரம்பியல் பிரச்சனை சம்பந்தமாக சிகிச்சை எடுத்து வருவதாலும், ஞாபகமறதியில் இருப்பதாலும், ஆவணங்களின் அடிப்படையில் இந்நீதிமன்றத்தின் அனுமதியுடன் அவரின் சார்பாக தான் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 17.09.2018ம் தேதி அரச்சலூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் கிருஷ்ணராஜ் நிலைய அலுவலில் இருந்தபோது பழனிசாமி என்பவர் கொடுத்த புகாரின் பேரில் நிலைய குற்ற எண். 195/2018, சட்ட பிரிவுகள் 279, 337, 304(A) இதச ன் கீழ் வழக்கு பதிவு செய்து புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளர் தங்கவேல் வசம் ஒப்படைத்திருந்தாகவும் இவ்வழக்கினை புலன் விசாரணை எடுத்து கொண்டு 17.09.2018 ம் தேதி காலை 9.00

மணிக்கு வழக்கின் சம்பவ இடத்திற்கு சென்றும், சாட்சிகள் சண்முகம், ஜெகநாதன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 பதிவு செய்து மேற்படி பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும். பின்பு 17.09.2018ம் தேதி காலை 10.00 மணிக்கு காங்கயம் அரசு மருத்துவமனை சென்று இறந்து போன கௌஸ்மௌதீன் என்பவரது பிரேதம் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 தயார் செய்தும் பின்பு இறப்பின் மருத்துவ ரீதியான காரணம் அறியும் பொருட்டு கிருஷ்ணமூர்த்தி என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்து சாட்சிகள் பழனிசாமி, ஆறுமுகம், சண்முகம், ஜெகநாதன், ஜேஸ்மின், ஆபிப்அலி, காஜாமைதீன், பாபு, நாகூர்மீரான் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்று சம்பவ இட விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் வாக்குமூலத்தில் இருந்தும் சம்பவம் நடந்தது உண்மையென தெரிந்து எதிரி சிவகார்த்தியை தேடி வந்தும் சம்பவ இடத்தில் இருந்து எதிரி ஓட்டி வந்த வாகனமான TN 33 N 2737 என்ற பேருந்தினையும் மற்றொரு வாகனமான TN 33 N 2760 என்ற பேருந்தினையும் மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி வைத்தும் சாட்சிகள் முருகேசன், தீபக், யுவராஜ், குமாரசாமி, செல்வராஜ், பிரேம்குமார், செந்தில், மணிகண்டபூபதி, சந்திரசேகரன், ஜாஸ்மின், காசிப்அலி, காஜாமைதீன், பாபு, நாகூர்மீரான், சண்முகம், ஜெகநாதன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக திருப்பூர் மண்டலம், பழனி கிளை உதவி பொறியாளர் தியாகராஜன் என்பவரை விசாரித்து TN 33 N 2737 என்ற பேருந்திற்கான 17.09.2018ம் தேதி பணிநியமித்த சான்று அ.சா.ஆ.6 பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும். தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக கோயமுத்தூர் மண்டலம், ஈரோடு கிளை மேலாளரான ஜோசப் சார்லி என்பவரை விசாரித்து TN 33 N 2760 என்ற பேருந்திற்கான 17.09.2018ம் தேதி பணிநியமித்த சான்று அ.சா.ஆ.7 பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, ஈரோடு கிழக்கு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் சென்றும், விபத்தில் சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனங்கள் இரண்டிற்கும் வாகன ஆய்வறிக்கை பெற்றும், வாகன ஆய்வாளர்

திரு.சதாசிவம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். TN 33 N 2737 வாகனத்தின் ஆய்வறிக்கை அ.சா.ஆ.8 பெற்றும், TN 33 N 2760 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.9 பெற்றும் விபத்தில் காயம்பட்ட பட்டியல் சாட்சிகளான தீபக், யுவராஜ், குமாரசாமி, செல்வராஜ், பிரேம்குமார், மணிகண்டபூபதி, செந்தில் ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த ஈரோடு அரசு மருத்துவமனை மருத்துவர் முகமது அப்சார் என்பவரை விசாரித்து விபத்து பதிவேட்டு சான்றிதழ்கள் முறையே அ.சா.ஆ.10, 11 12, 13, 14, 15, 16 பெற்றும் அ.சா.3 தீபக் மற்றும் அ.சா.7 சந்திரசேகருக்கு சிகிச்சை அளித்த ஈரோடு டிரஸ்ட் அரசு மருத்துவமனை மருத்துவர் பெரியசாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச் சான்றிதழ்கள் முறையே அ.சா.ஆ.17, 18 தீபக் மற்றும் சந்திரசேகரின் விபத்து போலீஸ் இன்டிமேசன் அ.சா.ஆ.19,20 பெற்றும் இறந்து போன கௌஸ்மைதீன் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் கார்த்திக்ராஜ் என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.21 பெற்றும் விபத்து ஏற்படுத்திய அரசு பேருந்து ஓட்டுனரான எதிரி சிவகார்த்திகேயன் அரசு போக்குவரத்து கழகத்தில் இருந்து தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளது தெரியவந்ததாலும் அவர் தொடர்ந்து தலைமறைவாக இருந்து வந்ததாலும் தனது புலன் விசாரணையை முடித்து தலைமறைவு எதிரியாக எதிரி சிவகார்த்திகேயன் மீது சட்டபிரிவு 279, 338 (8 எண்ணிக்கை), 304(A) இதச பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களில் எதிரிக்கு பாதகமாக உள்ள சங்கதிகள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச.பிரிவு 313( 1)(ஆ)ன் கீழ் வினவியபோது எதிரி மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு தாக்கல் செய்யப் பட்டுள்ளதாகவும் கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என்று கூறியபோதிலும் போதிய கால அவகாசம் அளிக்கப்பட்டு எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

8. <u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை :–</u>

அரசு தரப்பில் எதிரி மீது இதச சட்டப்பிரிவுகள் 279, 337(8 எண்ணிக்கை) 304(A)ன் படி சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தகுநிலை ஐயப்பாட்டிற்கிடமின்றி நிரூபிக்கப் பட்டுள்ளதா என்பதே ஆகும்?

9. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், அ.சா.1 முதல் அ.சா 12 வரை விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.21 வரையான சான்றாவணங்கள் மூலமாக அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே, எதிரியை தண்டிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

10. கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் இவ்வழக்கில் அரசு தரப்பில் சம்பவ இடத்திற்கு அருகில் இருந்த சாட்சியங்களை இந்த வழக்கில் சாட்சியாக விசாரணை செய்யாத நிலையில் விசாரிக்கப்பட்ட மற்ற சாட்சிகள் விபத்தில் காயம்பட்டவர்கள் மற்றும் இறந்து போனவரின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என்றும் விபத்திற்கு அ.சா.1 வேகமாக பேருந்து இயக்கியது தான் காரணம் என்றும், காயம்பட்ட சாட்சிகள் விபத்தைச் சத்தம் கேட்டு பார்த்ததாகவும், யாரின் ஆக்கிரதை காரணம் என்று குறிப்பிடவில்லை என்றும், எதிரி பேருந்தை மிதமான வேகத்தில் தான் ஓட்டினார் என்றும் சாட்சியமளித்துள்ளார்கள் என்றும், விபத்திற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றும், எனவே எதிரியை விடுதலை செய்யவேண்டுமென்று வாதிடப்பட்டது.

11. அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களானது சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப் பட்டுள்ளதா? என்பதை கவனமுடன் பரிசீலனை செய்து பார்க்கையில், எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 279, 337 (8எண்ணிக்கை), 304(A) ன் கீழ் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

12. இவ்வழக்கில் இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இவ்வழக்கில் அ.சா.1 புகார் கொடுத்த சாட்சியாகவும், அ.சா.2 அ.சா.3, அ.சா.5, அ.சா.6, அ.சா.7, அ.சா.8, அ.சா.9 வரையிலான சாட்சிகள் விபத்தில் காயமுற்ற சாட்சிகளாகவும், அ.சா.4 அரசு பேருந்தின் நடத்துனர் ஆகவும், அ.சா.10 பார்வை மகஜர் சாட்சியாகவும் அ.சா.11 வழக்கை முதல் தகவல் பதிவு செய்த சாட்சியாகவும், முதல் புலன் விசாரணை செய்த உதவி ஆய்வாளர் ஆகவும், வழக்கை புலன் விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த காவல் ஆய்வாளர் அ.சா.12 ஆகவும் விசாரிக்கப் பட்டுள்ளார்கள்.

**13. தீர்வு**

அரச்சலூர் காவல் ஆய்வாளர் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையில் 17.09.2018ம் தேதி காலை 7.35 மணிக்கு இந்த வழக்கின் எதிரி பழனியிலிருந்து அந்தியூர் நோக்கி செல்ல TN 33 N 2737 என்ற அரசுபேருந்தை தெற்கிலிருந்து வடக்காக ஒட்டிக்கொண்டு சென்று தனக்கு முன்னால் சென்ற இருசக்கர வாகனத்தை முந்துவதற்காக முயற்சி செய்து அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி எதிரில் சாட்சி பழனிச்சாமி என்பவர் ஈரோட்டிலிருந்து கொடைக்கானல் செல்வதற்காக வடக்கிலிருந்து தொற்காக ஓட்டி வந்த TN 33 N 2760 என்ற அரசுபஸ் மீது மோதாமல் இருக்க எதிரி சிவகார்த்தி தான் ஓட்டிவந்த அரசு பேருந்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் தாறுமாறாகவும் இடது பக்கம் திருப்பியோது எதிரி ஓட்டிவந்த TN 33 N 2737 பஸ்ஸின் வலது பின்பக்கம் சாட்சி பழனிச்சாமி ஓட்டிவந்த TN 33 N 2760 பஸ்ஸின் முன் பக்கம் பட்டு மேற்படி பேருந்தும், எதிரி ஓட்டிவந்த பேருந்தும் ரோட்டின் மேற்கு பகுதியிலிருந்த ஒரு வேப்பமரத்தில் பலமாக மோதி விபத்து ஏற்பட்டு இரண்டு வாகனங்களுக்கும் பலத்த சேதம் ஏற்படுத்தியும் மேற்படி சம்பவத்தில் எதிரி ஓட்டிய பேருந்தில் பயணம் செய்த 1.தீபக், 2. யுவராஜ், 3. குமாரசாமி, 4. செல்வராஜ், 5. பிரேம்குமார், 6. செந்தில், 7. மணிகண்டபூபதி, மற்றும் 8. சந்திரசேகரன்

ஆகியோர்களுக்கு சாதாணரக்காயங்கள் ஏற்பட்டுள்ளது. அதே போல் மேற்படி பேருந்தில் இந்த வழக்கு சம்பவத்தின்போது பயணம் செய்தகவுஸ்மைதீன் என்பவருக்கு, முன் மண்டை, இடது பக்க மண்டை, இடது கண்ணம், இடது கணுக்கால், வலது மார்பு, வலதுமார்பில் இருந்து வலது கை புஜம் வரை, மார்பிலிருந்து அடிவயிறு வரை,இடது பாதம், இடது கை புஜம், இடது முன் கை ஆகிய இடங்களில் பலத்தகாயம் ஏற்பட்டு இறப்பதற்கு மேற்படி எதிரியின் அதிவேகம் அஜாக்கிரதையாக வாகனம் ஓட்டியது காரணம் என குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

14. மேற்படி வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் 12 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அரசு தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.21 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட பழனிச்சாமி தனது சாட்சியத்தில் கடந்த 17.09.2018ம் தேதி காலை 6.55க்கு ஈரோட்டிலிருந்து கொடைக்கானல் செல்வதற்காக பூந்துறை தாண்டி வெள்ளகவுண்டன்வலசு என்ற இடத்தில் தெற்குநோக்கி சென்றுகொண்டிருந்தபோது எதிரே வந்த அரசுபேருந்து பதிவு எண். TN 33 N 2737 என்ற பேருந்து **இருசக்கர வாகனத்தை முந்தி வந்தபோது தான் ஓட்டிவந்த அரசு பேருந்தின் மீது மோதியது என்றும் மேற்படி சம்பவத்தின் போது இந்த வழக்கின் எதிரி தான் பேருந்தை ஓட்டி வந்தவர் என்றும்,மேற்படி எதிரி பேருந்தை தாறுமாறாக அதிவேகமாகவும் ஓட்டி வந்து தன்னுடைய பேருந்தில் மோதாமல் இருப்பதற்காக இடது மற்றும் வலது பக்கமாக பேருந்தை இயக்கியதால் இடதுபுறமாக இருந்த வேப்பமரத்தின் மீது மோதி முன் இருக்கையில் அமர்ந்திருந்த கவுஸ்மொய்தீன் என்பவருக்கு தலையில், தோள்பட்டை மற்றும் முகத்தில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும், பிற பயணிகளுக்கும் காயங்கள் ஏற்பட்டது.** என்று முதல் விசாரணையில் சாட்சியமளித்துள்ளார்.

15. மேற்படி அ.சா.1 தான் இந்த வழக்கில் புகார் கொடுத்துள்ளார். எதிரி எந்த இருசக்கர வாகனத்தை முந்தி வந்தார் என்ற விபரம் புகாரில் குறிப்பிடவில்லை என்றும், விபத்து நடந்த இடத்தில் வாய்க்கால் திட்டு உள்ளது என்றும், எதிரி ஓட்டிவந்த பேருந்து தனக்கு

முன்னால் 20 அடி அருகே வந்தபோது பார்த்ததாகவும் அப்போது சாட்சி ஓட்டிவந்த பேருந்தை இடதுபுறமாக ஓட்டியதாகவும் **ரோட்டிலிருந்து இறங்கி மண்ரோட்டில் பேருந்து இடது பக்க சக்கரத்தை இறக்கியதாகவும் இந்த விபத்து நடந்த இடம் ஜன நடமாட்டம் உள்ள இடம்** என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 கொடுத்த புகாரிலும் போலிசார் எழுதியதிலும் கையெழுத்து செய்ததாகவும், எதிரி தரப்பு வழக்குரைஞர் தனது குறுக்கு விசாரணையின்போது தூண்டுரையாக " **எதிரி ஓட்டிவந்த பேருந்தின் பின்னால் வலதுபக்கம் என் பேருந்தில் மோதியது என்றால் சரிதான். நான் இயக்கிய பேருந்தில் வலது முன் பக்கம் மோதியது என்ற்ால் சரிதான் என்றும் கேள்வி எழுப்பியுள்ளதை பார்க்கும்போது மேற்படி இரண்டு பேருந்துகளும் மோதி விபத்துஏற்பட்டுள்ளதை எதிரி தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டு மேற்படி தூண்டுரைக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. அதே போல் புகாரில் இரண்டாவது பக்கத்தில் சாட்சி கடைசி இருக்கையில் உட்கார்ந்து இருந்தது நான் என்று தவறாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.** கவுஸ்மொய்தீன் உட்கார்ந்திருந்ததை தவறாக குறிப்பிட்டுள்ளதாகச் சாட்சியமளித்துள்ளார். அ.சா.ஆ.1 புகாரில் உள்ள எழுத்துக்கும், கையெழுத்துக்கும் இடைவெளி உள்ளது என்றும் சாட்சியமளித்துள்ளார். அதே போல் இறந்து போனவருக்கு முகம் மற்றும் தலை, தோள்பட்டை ஆகியஇடங்களில் காயம் இருந்ததைப்பார்த்ததாகவும், மேலும் அ.சா.1 கொடுத்த புகாரில் எதிரி பேருந்தில் மோதாமல் இருப்பதற்காக இடதுபுறமாக திருப்பியதாகக் குறிப்பிட்டு புகார் கொடுக்கப்பட்டுள்ளது சரிதான் என்றும், எதிரி ஓட்டிவந்த பேருந்து வலதுபின்புறம், அ.சா.1 ஓட்டிவந்த பேருந்தின் வலது முன் பக்கம் பட்டு ரோட்டின் இடதுபுறம் சென்று முன்னால் இருந்த மரத்தின் மீது மோதாமல் இருக்க மீண்டும் ரோட்டின் வலது புறம் திரும்பியபோது எதிரி ஓட்டிவந்த பேருந்தின் இடது பின்படிக்கட்டின் மேல் லக்கேஜ் கேரியர் மரத்தின் கிளையில் சிக்கி கேரியர் சேதம் அடைந்ததாக சொல்லியுள்ள விபரம் சரியானது தான் என்றும் அரசுபேருந்து அதிவேகமாக இயக்கமுடியாது என்றும் சாட்சியமளித்துள்ளார். மேற்படி அ.சா.1ன் சாட்சியத்தின் படி சம்பவ சமயத்தில் எதிரி அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்தியுள்ளது மேற்படி அ.சா.1ன் சாட்சியத்தின் படி தெரியவருகிறது.

16. அ.சா.2ஆக விசாரிக்கப்பட்ட ஆறுமுகம் என்பவர் விபத்தில் சம்மந்தப்பட்ட TN 33 N 2760 பேருந்தின் நடத்துனர் ஆவார். அவர் பின் இருக்கையில் அமர்ந்து டிக்கெட் கொடுத்துக்கொண்டிருந்தபோது டமால் என்று சத்தம் கேட்டது என்றும், டிரைவர் பேருந்தை நிறுத்திவிட்டதாகவும், முன்னால் சென்று பார்த்தபோது எதிரே வந்தஅரசு பேருந்து பதிவு எண். TN 33 N 2737 தங்கள்பேருந்தின் முன் பகுதியில் மோதி இடது பக்கத்திலிருந்த வேப்பமரத்தின் மீது மோதியது என்றும், மேற்படி விபத்தை ஏற்படுத்திய பேருந்தை சென்று பார்த்தபோது **பயணி ஒருவர் அடிபட்டு கீழே உருண்டு வந்து கொண்டிருந்த தாகவும், அவரை பார்த்தபோது உயிர் கொஞ்சம் இருந்தது என்றும், சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும்,இந்த வழக்கின் எதிரி தான் விபத்தை ஏற்படுததிய பேருந்தை ஓட்டி வந்தவர் என்றும் உறவினர்களும், போலிசாரும் சம்பவ இடத்திற்க உடனடியாக வந்து விட்டார்கள் என்றும், சம்பவம் நடந்த இடம் வளைவான பகுதி என்றும் தான் நடத்துனராக இருந்த பேருந்தின் வலது முன் பக்கமும் எதிரி ஓட்டிவந்த பேருந்தின் வலது முன் பக்கமும் சேதாரம் ஏற்பட்டது என்றும், போலிசார் தயார் செய்த புகாரை தானும் அ.சா.1ம் கையெழுத்து செய்ததாகவும் காவல்நிலையத்தில் போக்குவரத்து அதிகாரிகள் பேசி யார் மீது புகார் கொடுக்கலாம் என்று முடிவு செய்தார்கள் என்றும், விபத்து நடந்த உடன் பேருந்திலிருந்து இறங்கியபோது பேருந்து ரோட்டின் மண் பகுதியில் முன் சக்கரம் மட்டும் இறங்கியிருந்தது** என்றும் சாட்சியமளித்துள்ளார். மேற்படி விபத்தானது மேற்படி சாட்சியத்தின் படி இந்த வழக்கின் எதிரி அதிவேகமாக அஜாக்கிரதையாக பேருந்தை ஓட்டி வந்ததினால் அ.சா.1 ஓட்டிய அரசு பேருந்தின் முன் பக்கம் மோதி அதன் காரணமாக எதிரி ஓட்டிவந்த பேருந்தில் பயணம் செய்த நபர் அடிபட்டு பேருந்திலிருந்து கீழே உருண்டு விழுந்து இறப்பு ஏற்பட்டுள்ளது தெரியவருகிறது. பின்னிட்டு இறந்தவர்களின் உறவினர்கள் வந்து போக்குவரத்து துறை அதிகாரிகளும் காவல் நிலையத்திலிருந்து போலிசாரும் வந்து காவல்நிலையம் சென்று புகார் கொடுக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. எனவே இரண்டு அரசு பேருந்துகளும் மோதி விபத்து ஏற்பட்டுள்ள நிலையில் அங்கு விசாரித்து தெரிந்து தான் எதிரி மீது புகார் கொடுக்கப்பட்டுள்ளது.

17. அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்ட தீபக் என்பவர் விபத்தை ஏற்படுத்திய எதிரி ஓட்டிவந்த அரசு பேருந்து TN 33 N 2737 என்ற பேருந்தில் அரச்சலூர் காவல்நிலைய பேருந்து நிறுத்தத்தில் ஏறிய நபராவர் அவர் தன்னுடைய சாட்சியத்தில் **தலவுமலை என்னும் இடத்தில் உள்ள வளைவில் எதிராக வந்த பேருந்து வலது பக்கமாக வேகமாக வந்துகொண்டிருந்தது என்றும், தான் பயணம் செய்த பேருந்தை ஓட்டுநர் இடதுபுறமாக திருப்பியபோதும் எதிராக வந்த பேருந்து தான் பயணம் செய்து வந்த பேருந்தின் மீது மோதியதில் அதில் தனக்கு கை மற்றும் தலையில் காயம் ஏற்பட்டதாகவும், தான் ஈரோடு அரசு மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை பெற்றுக்கொண்டு பின் மேல் சிகிச்சைக்காக டிரஸ்ட் மருத்துவமனையில் சேந்ததாகவும், தான் பயணம் செய்த பேருந்தை ஓட்டியவர் ஆஜர் எதிரி கவனமாகத்தான் ஓட்டி வந்தார் எதிரே வந்த பேருந்து தான் தான் பயனம் செய்த பேருந்தில் மோதியது என்று** முதல் விசாரணையில் சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சியத்தின் படி பேருந்தை இட வலமாக எதிரி ஓட்டி பேருந்து மற்றும் மரத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது தெரியவருகிறது.

18. அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்ட முருகேசன் என்பவர் தனது சாட்சியத்தில் மேற்படி விபத்தை ஏற்படுத்திய எதிரி ஓட்டிவந்த அரசு பேருந்தின் நடத்துனர் என்றும், தலவுமலை வெள்ளகவுண்டன் வலசு அருகே வந்தபோது குறுகிய வளைவு சாலையில் அ.சா.1 ஓட்டிவந்த TN 33 N 2760 என்ற அரசு பேருந்து வலதுபுறமாக ஏறி வந்து விபத்தை ஏற்படுத்தும் விதமாக வந்ததால் அதை தடுக்க எதிரி பேருந்தை இடதுபுறமாக இயக்கி பேருந்தின்பின் பக்கவாட்டில் மோதியது என்றும், தான் நடத்துனராக இருந்த பேருந்து இடதுபுறம் இருந்த வேப்ப மரத்தில் மோதி நின்றது என்றும், பேருந்தின் பின்பக்கத்தில் மரத்தின் மீது மோதியதால் தான் மயக்கமாகிவிட்டதாகவும், பின்பு என்ன நடந்தது என்று தெரியாது என்று சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சியம் விபத்து ஏற்படுத்திய அரசு பேருந்தில் பணிபுரிந்த நடந்துனர் ஆவார். இந்த விபத்துக்கு காரணம் அ.சா.1 வடக்கிலிருந்து தெற்காக வந்தபோது வலது புறமாக ஏறி அரசுப் பேருந்தை ஓட்டியதால் அதில் இருந்து

விபத்து ஏற்படாமல் தற்காப்புக்காக இடதுபுறமாக எதிரி அரசுப் பேருந்தை திருப்பியதால் அங்கு ரோட்டின் ஓரத்தில் இருந்த வேப்பமரத்தில் மோதி தான் விபத்து ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

19. அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்ட செல்வராஜ் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் 17.09.2018ம் தேதி அரச்சலூரிலிருந்து ஈரோடுக்கு சென்ற TN 33 N 2737 என்ற அரசு பேருந்து காலை 7.30 மணிக்கு அரச்சலூர் தலவுமலை தாண்டி வெள்ளகவுண்டன் வலசு அருகே வந்துகொண்டிருந்தது என்றும், **மேற்படி தான் பயணம் செய்த பேருந்தின் ஓட்டுநர் அதிவேகமாக ஓட்டி வந்தார் என்றும், தான் பயணித்த பேருந்து இருச்சகர வாகனத்தின் மீது மோதக்கூடாது என்பதற்காக இடதுபுறமாக இயக்கியதில் எதிர் திசையில் வந்த பேருந்து தங்கள் பேருந்தின் பின் பகுதியில் மோதி எதிர்திசையில் வந்த பேருந்துக்கு முன்பக்கத்தில் சேதாரம் ஏற்பட்டது. பேருந்தில் பயணம் செய்த செல்வராஜிக்கு கை மற்றும் காலில் சிராய்ப்புக்காயம் ஏற்பட்டது என்றும், தான் பயணம் செய்த பேருந்தில் பயணம் செய்த கவுஸ் மொய்தீன் என்பவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்** என்றும் சாட்சியமளித்துள்ளார். சம்பவம் நடந்ததாகக் சொல்லப்படும் இடம் குறுகிய வளைவு என்றும், தான் பயணம் செய்த பேருந்தில் படிக்கட்டில்இருந்து முன்பக்கமாக 3வது வரிசை இருக்கைகள் தள்ளி அமர்ந்திருந்ததாகவும், முன்னால் ரோட்டைப் பார்க்க முடியாது என்றும், டாமார் என் சத்தம் கேட்டு இறங்கிப் போய் பார்த்ததாகவும், சம்பவ இடத்தில்இரண்டு அரசு பேருந்துகளும் ரோட்டில் இருந்தது என்றும், பேருந்து எவ்வளவு வேகத்தில் சென்றுகொண்டிருந்தது என்று தெரியாது என்றும், போலிசார் வந்து விசாரித்து புகார் வாங்கிக்கொண்டார்கள் என்றும், மேலும் அ.சா.5 குறுக்கு விசாரணையின் **போது எதிரி தரப்பு வழக்குரைஞர் எதிரி ஓட்டிய பேருந்து சாதாரண வேகத்தில் சென்றது என்று குறிப்பிட்டு கேள்வி எழுப்பியதற்கு சரிதான் என்று பதில் அளித்துள்ளார். ஆனால் எதிர் திசையில் வரும் பேருந்தை கவனிக்காமல் சென்றார். விபத்து நடந்த சமயத்தில் தான் இருக்கையில் அமர்ந்து இருந்ததாகவும், பேருந்தின் இடதுபுற ஜன்னல் ஓரமாக அமர்ந்து இருந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.** மேற்படி சாட்சியின் சாட்சியத்தையும் எதிரி ஓட்டிவந்த பேருந்தில் பயணம் செய்த மற்ற சாட்சிகளான தீபக் சாட்சியத்தையும்

எதிரி ஓட்டிவந்த பேருந்தின் நடத்துனரான முருகேசனின் சாட்சியத்தையும் பரிசீலனை செய்தபோது இந்த வழக்கின் எதிரி தான் தனக்கு முன்னால் சென்ற இருசக்கர வாகனத்தை முந்திக்கொண்டு சென்று முன்னால் சென்ற பேருந்தை கவனிக்காமல் மேற்படி பேருந்தின் மீது மோதாமல் தடுப்பதற்காக பேருந்தை இடதுபுறமாக திருப்பியபோது அ.சா.1 ஓட்டி வந்த பேருந்தின் முன்பக்கம் மோதி உள்ளது. எனவே வலபுறமாக திருப்பியபோது மேற்குபுறம் இடதுபுறமாக இருந்த வேப்பமரத்தின் மீது மோதி எதிரே வந்த அரசு பேருந்தின் முன் பக்க பகுதியில் மோதியும் விபத்து ஏற்பட்டுள்ளது தெரியவருகிறது.

20. அதே போல் அ.சா.7 ஆக விசாரிக்கப்பட்ட சந்திரசேகரன் என்பவர் எதிரி ஓட்டிவந்த அரசுப் பேருந்தில் பயணம் செய்த மற்றொரு நபராவர். தான் பயணம் செய்த பேருந்து அரச்சலூர் தலவுமலை தாண்டி வெள்ளைக்கவுண்டன் வலசு பகுதியில் சென்றபோது தான் பயணம் செய்த பேருந்து தாறுமாறகவும், வேகமாகவும் சென்றது எதிராக வந்த அரசு பேருந்தும் அதிவேகமாகத்தான் வந்தது எதிராக வந்த பேருந்து தான் பயணம் செய்து வந்த பேருந்தில் மோதுவதை தடுக்க எதிரி பேருந்தை இடதுபுறமாக திருப்பியபோது முன் பகுதியில் மோதாமல் பேருந்து நிலைதடுமாறி பின் பகுதியில் மரத்தின் மீது மோதியதில் பேருந்திலிருந்து தான் வெளியே தூக்கி வீசப்பட்டு தனக்கு தாடை, மேல் உதடு,இடது முழங்கால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது என்றும், தான் பயணம்செய்த பேருந்தின் ஓட்டுநரைத் தெரியும் என்றும், தான் பயணம்செய்த பேருந்தில் அதிக அளவில் பயணிகள் இருந்தார்கள் என்றும், எதிரில் வந்த அரசு பேருந்து அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும் ஓட்டி வந்ததாகவும் தெரிந்து கொண்டதாகவும் விபத்து நடந்த பகுதி வளைவான பகுதி தான் என்றும், தார் ரோட்டில் தான் விபத்து ஏற்பட்டது என்றும், போலிசார் சம்பவ இடம் வரும் வரை இரண்டு பேருந்துகளும்தார் ரோட்டில் நின்றுகொண்டிருந்தது என்றும், சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியின் சாட்சியத்தின் மூலம் எதிரே வந்த அரசு பேருந்தும் அதிவேகமாக வந்துள்ள நிலையில் எதிரி ஓட்டிவந்த பேருந்து வேகமாகவும் தாறுமாறாகவும் சென்றதாகத்தான் மேற்படி அ.சா.7 சந்திரசேகரன் தன்னுடைய

சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார். எனவே அ.சா.1 வேகமாக வந்தாலும் கவனமாக ஓட்டி விபத்தினால் எவ்வித சேதாரமும் அந்த பேருந்தில் வந்த பயணிகளுக்கு ஏற்படவில்லை ஆனால் எதிரி அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் பேருந்தை இயக்கியதால் தான் பேருந்துக்கு பலத்த சேதாரமும் பேருந்தில் பயணம் செய்த 1 பயணி இறந்தும் மற்றவர்களுக்கு காயம் ஏற்பட்டுள்ளது தெரியவருகிறது.

21. அ.சா.8 ஆக விசாரிக்கப்பட்ட எதிரி ஓட்டிய பேருந்தில் பயணம் செய்த பிரேம்குமார் அரசுப் பேருந்து வேகமாகச் சென்றது என்றும், அரச்சலூர் தலவுமலை தாண்டி வெள்ளைக்கவுண்டன் வலசு தாண்டி **வலதுபுறம், இடதுபுறமும் பஸ்ஸை திருப்பி இடதுபுறத்திலிருந்த புளியமரத்தில் பேருந்தின் பின் பகுதியில் மோதி சம்பவ இடத்தில் பேருந்தின் கடைசி இருக்கையில் பயணயம் செய்த கவுஸ்மைதீன் என்பவர் இறந்துவிட்டதாகவும் தனக்கு மூககு வலது கை பெருவிரலில் காயம் ஏற்பட்டது என்றும்,** தன்னிடமிருந்த பேருந்தின் பயணச்சீட்டை கேட்டு போலிசார் விசாரிக்கவில்லை என்றும், விபத்து நஷ்டஈடு கேட்டு போலிசார் விசாரிக்கவில்லை என்றும், போலிசார் மறுநாள் தான் விசாரித்தாகவும் பேருந்தின் முன்புறம் என்ன நடந்தது என்று தெரியாது என்றும், சம்பவ தினத்தன்று தான் பேருந்தில் பயணம் செய்ததால் தான் மேற்படி விபத்தின் போது காயம் ஏற்பட்டது என்றும், பயணம் செய்தபோது பேருந்து வலது மற்றும் இடது பக்கமாக திரும்பியது உண்மைதான் என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.9 ஆக விசாரிக்கப்பட்ட மணிகண்டபூபதி என்பவர் எதிரி ஓட்டிவந்த பேருந்தில் பயணம்செய்த நபராவார் அவர் தன்னுடைய சாட்சியத்தில் அரச்சலூர் வெள்ளைக்கவுண்டன் வலசு அருகே வந்தபோது இடது மற்றும் வலது பக்கமாக மாறி மாறி பேருந்து சென்றது என்றும் எதிர் திசையில் வந்த அரசு பேருந்தில் உரசி தான் பயணம் செய்த பேருந்து புளியமரத்தில் பின்பக்கத்தில் மோதியது என்றும், தனக்கு தோள்பட்டை, கால் முட்டி மற்றும் சிறிய அளவில் காலில் காயங்கள் ஏற்பட்டது என்றும், விபத்து சம்மந்தமாக போலிசார் மறுநாள் விசாரித்தாகவும் தனியார் மருத்துவமனையில் 6 மாதம் சிகிச்சை பெற்றதாகவும் ஆனால் பேருந்து ஓட்டுநரைத் தான் பார்க்கவில்லை என்றும், விபத்து நடந்தபோது போலிசார் விசாரித்தபோது காயம்

ஏற்பட்டது குறித்து குறிப்பிடவில்லை என்றும் மேலும் பழனியில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தபோது விபத்தினால் காயம் ஏற்பட்டதாகச் சொன்னதாகவும், எதிர் திசையில் வந்த அரசு பேருந்துக்கு வலது முன்புறம் சேதாரம் ஏற்பட்டது என்றும், போலிசார் விசாரணையில் பயணச்சீட்டை கொடுக்கவில்லை என்றும் பின் இருக்கையில் அமர்ந்து பயணம் செய்ததால் முன்னால் என்ன நடந்தது என்று பார்க்கமுடியாது என்றும் சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சியின் சாட்சியத்தின் படியும் இந்த எதிரி ஓட்டிவந்த அரசு பேருந்து தாறுமாறாக அதிவேகமாக சென்று எதிரே வந்த அரசு பேருந்தில் மோதாமல் இருப்பதற்காக இடதுபுறமாக திருப்பியபோது பேருந்தானது ரோட்டின் மேற்குபுறமாக உள்ள மரத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டு அதில் பயணம் செய்த மேற்படி சாட்சிகளுக்கு காயம் ஏற்பட்டுள்ளது தெரியவருகிறது.

22. அதே போல் அ.சா.10 ஆக விசாரிக்கப்பட்டஜெகநாதன் என்பவரும் விபத்து நடந்த இடத்தின் அருகில் உள்ள வீட்டில் வசிப்பவர் என்றும் விபத்து பற்றி சத்தம் கேட்டு வந்து பார்த்துள்ளார். மேற்படி விபத்தானது இரண்டு பேருந்துகளும் மோதாமல் இருப்பதற்காக பேருந்தை திருப்பியபோது மரத்தில் மோதி விபத்து ஏற்பட்டது என்றும் தன் முன்னிலையில் பார்வை மகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகச் சாட்சியமளித்துள்ளார். அ.சா.11 ஆக விசாரிக்கப்பட்ட உதவி ஆய்வாளர் கிருஷ்ணராஜ் தனது சாட்சியத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்து சாட்சியமளித்துள்ளார். முதல் தகவல் அறிக்கையில் காலம் எண் 15ல் நேரம் குறிப்பிடப்படவில்லை என்றும், காலம் 3ல் G.D.என்ட்ரி விபரம் குறிப்பிடப்படவில்லை என்றும் நீதிமன்றத்திற்கு 7 நாட்கள் காலதாமதமாக அனுப்பப்பட்டுள்ளது உண்மை தான் என்றும் சாட்சியமளித்துள்ளார். இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் ஆவணங்களின் அடிப்படையில் காவல் ஆய்வாளர் ராஜாகண்ணன் சாட்சியமளித்துள்ளார். அரசு தரப்பில் விசாரணை அதிகாரியானவர் இந்த வழக்கில் இறந்துபோன கவுஸ்மைதீன் பிரேதத்தை பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்து பஞ்சாயத்தார் கருத்தைப்

பெற்று தாக்கல் செய்த ஆவணத்தைப் பார்வையிடும் போது பஞ்சாயத்தார் தரப்பில் இந்த விபத்தானது எதிரி ஓட்டிவந்த அரசு பேருந்து வெள்ளைக்கவுண்டன் வலசு என்ற இடத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி முன்னால் சென்ற இருசக்கர வாகனத்தை முந்த முயன்று அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி எதிரே தெற்கு நோக்கி வந்த அரசு பேருந்து பதிவு எண். TN 33 N 2760 பேருந்தின் மீது மோதாமல் இருக்க இடதுபுறம் மற்றும் வலதுபுறம் தாறுமாக திருப்பியதால் எதிரி ஓட்டிவந்த அரசு பேருந்து வலது பின்புறம் சாட்சி.1 ஓட்டிவந்த பேருந்தின் முன்புறம் பட்டு பின்பு எதிரி அந்த பேருந்தை வலதுபுறமாக தாறுமாறாக திருப்பியதால் ரோட்டின் மேற்குபுறம் உள்ள வேப்பமரத்தில் எதிரி ஓட்டிய பேருந்தின் இடது பின்பகுதி மோதி படிக்கட்டுக்கு அருகில் உள்ள கேரேஜ் மற்றும் கடைசி 3வது இடது பக்க இருக்கையில் பலத்த சேதம் ஏற்பட்டு எதிரி ஓட்டிவந்த பேருந்தில் பயணம் செய்த கவுஸ்மைதீனுக்கு தலை, தோள்பட்டை, முழங்கை, இடது கால் ஆகிய இடங்களில் அடிபட்டு இறந்து போய் உள்ளார் என்று கருத்து தெரிவித்துள்ளனர். மேற்படி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் படியும் எதிரி பேருந்தை அதிவேகமாகவும், தாறுமாறாகவும் முன்னால் சென்ற இருசக்கர வாகனத்தை ஓவர்டேக் செய்ய ஓட்டிச்சென்றுள்ளது தெரிய வருகிறது.

22. அதே போல் மேற்படி எதிரிதான் 17.09.2018ம் தேதி பழனியிலிருந்து அந்தியூருக்கு அரசு பேருந்தை இயக்கியதற்கான பணி நியமனம் செய்த சான்றை இந்த வழக்கில் பார்க்கும் பொழுதும் எதிரி தரப்பில் எதிரி விபத்து நடந்த அன்று வாகனத்தை இயக்கியுள்ளதை மறுக்காமல் ஒப்புக்கொண்டுள்ளதும் தெரியவருகிறது. அதே போல் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கையைப் பரிசீலனை செய்யும் போது மேற்படி எதிரி ஓட்டிவந்த அரசு பேருந்துக்கு முன் புற விண்டு ஸ்கீரின் சேதாரம் ஆகியும் பின்புற கிளாஸ் சேதாரம் ஆகியும் பின்பக்க புட்போர்டு வளைந்தும் முன்பக்க புட்போர்டு சேதாரமாகியும், பின்பக்க இடதுபுற 5ம் நெம்பர் சீட் கண்ணாடி சேதாரமாகியும் இடது புற பேருந்தின் பாகங்கள் சேதாரமாகியும் பின்புற இடதுபுற 5ம் நெம்பர் கம்பி வளைந்தும் வலதுபுற 2ம் நெம்பர் கண்ணாடி சேதாரமாகியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ள்து. ஆனால்

இயந்திரக்கோளாறினால் விபத்து ஏற்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதே போல் அ.சா.1 ஓட்டிவந்த அரசு பேருந்தில் முன் பக்க வலதுபுற கண்ணாடி சேதாரம் ஆகியும் முன்பக்க வலதுபுறம் சேதாரமாகியுள்ளதைப் பார்க்கும்போது எதிரி அதிவேகமாகவும் மற்றும் அஜாக்கிரதையாக பேருந்தை எதிரி ஓட்டிவந்த காரணத்தினால் தான் வாகனத்திற்கு அதிக சேதாரங்கள் ஏற்பட்டு அதில் பயணம் செய்த 8 நபர்களுக்கு சாதாரணக்காயம் ஏற்பட்டும் ஒரு நபருக்கு உயிர் இழப்பு ஏற்பட்டுள்ளது. ஆனால் அதே நேரத்தில் அ.சா.1 வேகமாக வாகனத்தை ஓட்டிவந்திருந்தாலும் எதிரி பேருந்தை ஓட்டியதால் ஏற்பட்ட விபத்தின் காரணமாக முன்பக்க சேதாரத்தை தவிர பேருந்தில் பயணம் செய்த எந்த நபர்களுக்கும் மேற்படி விபத்தினால் எந்த சேதாரமும் அ.நா.1 ஓட்டிவந்த பேருந்ததில் ஏற்படவில்லை என்பதைக் கருத்திற்கொண்டும் எதிரி ஓட்டிய பேருந்தில் பயணம் செய்த நபர்களுக்கு விபத்தின் போது காயங்கள் ஏற்பட்டதற்கான காயங்களுக்கு சிகிச்சை அளித்தற்கான காயச்சான்றிதழைப் பார்வையிட்டும் மேற்படி அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் படியும் எதிரி தான் அரசுப் பேருந்தை அஜாக்கிரதையாக ஓட்டிச் சென்று விபத்தை ஏற்படுத்தியுள்ளது தெரியவருகிறது. மேலும் விபத்தை ஏற்படுத்திய பேருந்தின் ஓட்டுநர் சம்பவ இடத்தில் இருந்து தப்பியோடிவிட்டதாகவும் புலன் விசாரணை அதிகாரி சாட்சியமளித்துள்ளார். மேற்படி வழக்கின் ஆய்வாளரின் சாட்சியத்தின் படியும், எதிரி தான் மேற்படி கவுஸ்மைதீன் இறப்புக்கு காரணம் என்பது தெரியவருகிறது. எனவே மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் முடிவு செய்யப்பட்ட வழக்கான **"State of Punjab Vs Dil Bahadur – 2023 JC (SC) 3640 – The Hon'be High Court has not at all considered the fact that the IPC is punitive and deterrent in nature. The principal aim and object are to punish offenders for offences committed under IPC. Sections 279, and 304A can be invoked only if act of the accused is negligent and reash. State of Himachal Prades Vs Ramachandra Rabidas (2019) 10 SCC 75 – this Court time and again emphasised on the need to strictly punish offenders responsible for causing motor vehicle accidents. With repidly increasing motorisation, India is facing an increasing burden of road traffic injuries and fatalities."** என்ற முன் தீர்ப்பின் படியும், மேலும் மாண்புமிகு கேரளா உயர்நீதிமன்றத்தின்

"**2025 KLT OnLine 2153 – Penal Code 1860,S.304(A) – Criminal negligence occurs when there is gross and culpable neglect or failure to exercise the required care and precaution to guard against injury, either to the public generally or to an individual in particular, which having** " என்ற முடிவு செய்யப்பட்ட முன் தீர்ப்புகளின் படியும், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களின் படியும் எதிரியை இதச பிரிவு 279, 337(8 எண்ணிக்கை) மற்றும் 304(எ)ன் படி எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சநதேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

23. **முடிவாக,** இவ்வழக்கின் எதிரி இதச பிரிவு 279, 337(8எண்ணிக்கை), 304(ஏ)ன் படி குற்றவாளி என குவிமுச பிரிவு 255(2)ன் படி முடிவு செய்து எதிரி செய்த இதச பிரிவு 279ன் படியான குற்றத்திற்கு எதிரிக்கு 6 மாதகாலம் சாதாரண சிறைதண்டனையும், மற்றும் இதச பிரிவு 337(8எண்ணிக்கை),ன் படியான குற்றத்திற்கு தலா 1 மாதம் சாதாரண சிறைதண்டனையும், மற்றும் அபராதம் தலா ரூ.1000/– க/த பட்சத்தில் தலா 1 மாதம் சாதாரண சிறைதண்டனையும் மற்றும் இதச பிரிவு 304(ஏ)ன் படியான குற்றத்திற்கு எதிரிக்கு 2 வருடகாலம் சாதாரண சிறைதண்டனையும் விதித்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. எதிரிக்கு மேற்படி பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்ட தண்டனையை சேர்த்து ஏககாலத்தில் ஒருங்கியல்பாக அனுபவிக்கவேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. மொத்தஅபராதம் ரூ.8000/– அபராதம் வசூலிக்கப்பட்டது.

24. எதிரி இந்நீதிமன்றத்திற்கு எழுதிக் கொடுத்த பிணை பத்திரம் இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் இரத்தாக உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்பட்டு, ஆஜர்படுத்தப்படவில்லை.

25. இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழைதிருத்தம் செய்து, இன்று 2026ம்

ஆண்டு மார்ச் மாதம் 10ம் தேதி என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.03.10 18:23:16 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், எழுமாத்தூர் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.

**அரசு தரப்பு சாட்சிகள்**:-

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. பழனிச்சாமி – புகார்தாரர் |
| அ.சா.2 | திரு. ஆறுமுகம் |
| அ.சா.3 | திரு. தீபக் |
| அ.சா.4 | திரு.முருகேசன் |
| அ.சா.5 | திரு. செல்வராஜ் |
| அ.சா.6 | திரு.செந்தில் |
| அ.சா.7 | திரு.சந்திரசேகர;d |
| அ.சா.8 | திரு. பிரேம்குமார் |
| அ.சா.9 | திரு. மணிகண்டபூபதி |
| அ.சா.10 | திரு.ஜெகநாதன் |
| அ.சா.11 | திரு. கிருஷ்ணராஜ் – உதவி ஆய்வாளர் |
| அ.சா.12 | திரு. ராஜாகண்ணன் – காவல் ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:-**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | 17.09.2018 | புகார் மனு |
| அ.த.சா.ஆ.2 | 17.09.2018 | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.3 | 17.09.2018 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.4 | 17.09.2018 | மாதிரி வரைபடம் |
| அ.த.சா.ஆ.5 | 17.09.2018 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.த.சா.ஆ.6 | .. | TN 33 N 2737 பணிநியமனச் சான்றிதழ் |
| அ.த.சா.ஆ.7 | .. | TN33N 2760 பணி நியமனச் சான்றிதழ் |

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.8 | 20.09.2018 | TN 33 N 2737 பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.த.சா.ஆ.9 | 20.09.2018 | TN33 N 2760 பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.த.சா.ஆ.10 | 17.09.2018 | தீபக்கின் விபத்து பதிவேட்டு நகல் |
| அ.த.சா.ஆ.11 | 17.09.2018 | யுவராஜின் விபத்துப் பதிவேட்டு நகல் |
| அ.த.சா.ஆ.12 | 17.09.2018 | குமாரசாமியின் விபத்துப் பதிவேட்டு நகல் |
| அ.த.சா.ஆ.13 | 17.09.2018 | செல்வராஜின் விபத்துப் பதிவேட்டுநகல் |
| அ.த.சா.ஆ.14 | 17.09.2018 | பிரேம்குமாரின்விபத்துப் பதிவேட்டுநகல் |
| அ.த.சா.ஆ.15 | 17.09.2018 | மணிகண்டபூபதியின்விபத்துப் பதிவேட்டுநகல் |
| அ.த.சா.ஆ.16 | 17.09.2018 | செந்தில்விபத்துப் பதிவேட்டுநகல் |
| அ.த.சா.ஆ.17 | 17.09.2018 | தீபக்கின் காயச்சான்றிதழ் நகல் |
| அ.த.சா.ஆ.18 | 17.09.2018 | சந்திரசேகரின் காயச்சான்றிதழ் நகல் |
| அ.த.சா.ஆ.19 | 17.09.2018 | தீபக்கின் போலிஸ் இண்டிமேசன் |
| அ.த.சா.ஆ.20 | 17.09.2018 | சந்திரசேகரனின் போலிஸ் இண்டிமேசன் |
| அ.த.சா.ஆ.21 | 17.09.2018 | கவுஸ்மைதீன் பிரேத பரிசோதனைஅறிக்கை |

**எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள்**:–

**– இல்லை –**

**பிற்சேர்க்கை** :–

1) வழக்கு விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்.

2) வழக்கின் விசாரணை காலத்தில் எந்த ஒரு சாட்சியும் 3 நாட்களுக்கு மேல் விசாரணையின்றி நிறுத்தி வைக்கப்படவில்லை.

3) வழக்கின் முடிவு அரசு தரப்புக்கு தெரிவிக்கப்பட்டது.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.03.10 18:23:32 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், எழுமாத்தூர் கிராமம்,
மொடக்குறிச்சி வட்டம்